# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(02.07.2022 முதல் 06.07.2022 )**

**அறிக்கை எண் 052/2022** **தேதி.01.072022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (26.06.2022 முதல் 30.06.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 06.07.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26/06 | 27/06 | 28/06 | 29/06 | 30/06 | தேதி | நாள் -1 02/07 | நாள்-2 03/07 | நாள்-3 04/07 | நாள்-4 05/07 | நாள்-5 06/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 8 | 10 | 6 | 12 | 15 |
| 27 | 34 | 33 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 33 | 33 | 31 |
| 23 | 24 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 5 | 6 | 6 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| 79 | 76 | 78 | 78 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 47 | 58 | 67 | 74 | 95 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 65 | 65 |
| 29 | 24 | 15 | 23 | 21 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 14 | 14 | 16 | 16 |
| 250 | 230 | 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (02.07.2022 முதல் 06.07.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 34°செ

ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 முதல் 16 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழையும் மணிக்கு 10-14 கி.மீ வேகத்தில் காற்றும் எதிர் பார்க்கப்படுவதால் இறவை பயிர்களுக்கு மண் ஈரத்தினைப் பொறுத்து நீர் பாசனம் செய்ய வேண்டும். காற்றின் வெப்பநிலையும் கடந்த வாரத்தினை விட சற்று கூடுதலாக வாய்ப்புள்ளது. |
| நெல் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் பகல் நேர வெப்பநிலை, நெல் நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் நிலவ ஏதுவாக உள்ளது. இதனை கண்காணித்து தேவைப்படின் 5 சதவீத வேப்பங்கொட்டை சாறினைத் தெளிக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி நடவு செய்வதனை தொடரலாம். |
| பயறு வகைகள் | வளர்பருவம் | லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் பயறுகளில் மண்ணினை தூசு வருமாறு நன்கு கிளறிவிடவும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்கலாம். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் 10-14 கிமீ வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இடவும்.<br>குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்கவும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்கலாம். |
| கால்நடைகள் | | மழையுடன் மணிக்கு 8 - 14 கி.மீ வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>காற்றின் வேகம் மற்றும் வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதால் கோழிகளுக்கு போதிய அளவு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும். மேலும் தீவனம் காற்றில் சேதமடையாதவாறு கூடாரங்களில் காற்று வரும் திசையில் சாக்கு பையை தொங்கு விடவும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும்.<br>வரும் நாட்களில் மழையுடன், அதிக காற்றின் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால், கால்நடைகளுக்கு உலர்ந்த திடமான தீவனங்களை கொடுக்கவும். |

**குறுஞ்செய்தி**

- கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**